நாள்: 10.07.2026
OS. 168/2021
பெயர் பிரியா
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u> (2,3 ம் பிரதிவாதிகள் தரப்பு)

என்னுடைய பிராது மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சர்வே எண். 240/1A 1 ஏக்கர் 11 செண்ட் நிலம் T.K.சுப்பிரமணியத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்குரை சொத்து என் தந்தைகக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் 02.09.1989 ம் தேதி பதிவில்லா கிரைய ஆவணம் மூலம் என் தந்தை சுப்பிரமணியத்திடமிருந்து கிரையம் வாங்கி அனுபவித்து வந்தார். மேற்படி சங்கதிகளை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அது பதிவில்லாத ஆவணம் என்பதால் சொல்லவில்லை. வா.சா.ஆ–6, வா.சா.ஆ.7 ஆவணங்களில் என் தந்தை, சொத்து எனக்கு தனித்து பாத்தியப்பட்டு எனது பெயரால் 167 மனைவரி பட்டா பெற்று அனுபவித்து வந்த சொத்தை எழுதிக்கொடுப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

என் தந்தை வா.சா.ஆ–6, வா.சா.ஆ.7 ஆவணங்களில் அவர் தனித்து சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் ஆண்டு அனுபவித்து வந்த சொத்தை தான் எனக்கு நன்கொடை எழுதிக்கொடுத்துள்ளார். வா.சா.ஆ.8 எனக்கு எழுதிக்கொடுத்த தான செண்ட்டில்மெண்ட் ஆவணத்திலும், மேற்படி ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள ஆவண வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். வழக்குரை சொத்துக்களில் உள்ள அளவுகளை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் FMP தாக்கல் செய்துள்ளேன். வரைபடம் வா.சா.ஆ.5 பிராதுடன் தாக்கல் செய்யவில்லை என்றும், பின்னர் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வரைபடம் தவிர வேறு பதிவு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் பச்சையப்பன், கிழக்கு பக்கம் பொன்னையா என்பவருக்கு எப்படி பாத்தியம் என்றால் சுப்பிரமணியிடம் இருந்து அவர்கள் கிரையம் வாங்கி அவர்கள் அனுபவித்து வந்த சொத்திற்கு நத்தம் நிலவரி திட்டத்தில் பட்டா கொடுத்துள்ளார்கள். பச்சையப்பன், பொன்னையாவுக்கு எப்படி பட்டா கிடைத்தது என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு சென்று விசாரித்தேன். அதன் படி தெரிந்து கொண்டேன். நான் தாக்கல் செய்த பிராதில் ஆவணப்பட்டியலில் பச்சையப்பன், பொன்னையா பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிராது 4 வது பக்கம் 7 பத்தியில் 2, 3 பிரதிவாதிகள் 27.11.2003, 11.03.2019 ஆகிய தேதிகளில் தான செட்டில் மெண்ட் மற்றும் கிரைய ஆவணம் எழுதிய விவரம் எனக்கு 25.07.2019 நிலத்தை பார்க்க சென்ற போது தெரியவந்தது. நான் நிலத்தில் தகரசெட் அவர்கள் அமைத்தபோது நான் ஆட்சேபித்தேன், அப்போது ஆவணங்கள் எனக்கு காட்டினார்கள். மேற்படி சங்கதிகளை என்னுடைய வழககுரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மேற்படி சங்கதி பக்கத்து வீட்டுக்காரர் சொல்லிதான் எனக்கு தெரியும் என சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல.

பிராதில் வழக்கு சொத்து எனது மற்றும் எனது குடும்பத்தாரின் பார்வையில் இல்லை என இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முனனர் 18 ஆண்டுகளுக்கு முன்னர் ஊரில் இல்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது குடும்பம் என்பது நான், என் கணவர், என் மாமனார், மாமியார் என்றால் சரிதான். என் அப்பா, அம்மாவையும் நான் விட்டுக்குடுக்க முடியாது. வா.சா.ஆ.6,7, ஆகிய ஆவணங்கள் ஒரேநாளில் அடுத்தடுத்த ஆவணங்களாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் பதிவு செய்யும் போது ஓடைப்பட்டி கிராமம், 11 வது வார்டு , ராயர் குள சாவடி, 3 வது தெருவில் வசித்து வந்து, தற்சமயம் சென்னையில் வசிப்பதாக சொல்லப்பட்டிருப்பது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள முகவரி வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள எங்கள் பூர்விக வீட்டின் முகவரி ஆகும். என் அப்பாவுடன் ஜெகநானதன், ராமு, தனுஷ்கோடி, பார்த்திபன், ராமுத்தாய், ஜானகி ஆகியோர் உடன்பிறந்தவர்கள் ஆவார். என் தந்தையின் தாயார் பெயர் குள்ளம்மாள். அவர் ஓடைப்பட்டியில் காலமாகிவிட்டார். அவரை அங்கு தான் அடக்கம் செய்யப்பட்டார், அவரது இறுதி சடங்கில் நாங்கள் கலந்து கொண்டோம். 16.05.2018 ல் தான் இறந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் தாத்தா சுப்பையாவும் ஓடைப்பட்டி வீட்டில் தான் இறந்தார்.அவருடைய இறுதி சடங்கில் நானும், என் தந்தையும் கலந்து கொண்டோம். 31.12.2000 ம் தேதி காலமானார். என் பாட்டி இறந்த தேதி எனக்கு தெரியும் என்றும், வழக்ககிற்காக எனக்கு ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் பாட்டி குள்ளமாளும், என் தாத்தா சுப்பையாவும் பிராது மாதிரி வரைபடத்தில் கண்ட வழக்குரை சொத்திற்கு வடக்கு பக்கம் சர்வே எண்.9 என காட்டப்பட்டுள்ள வீட்டில் தான் இறந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் இறந்தபின்னர் அவர்கள் சொத்தை என் அப்பா, அவரது சகோதரர்களும் பாகம் பிரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் பாகம் பிரித்த சொத்து வரைபடத்தில் எந்த பக்கம் என்று கேட்டால் சாட்சி எனக்கு தெரியாது என சாட்சியம் அளிக்கிறார். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் எங்கள் பூர்விக வீடு உள்ளது. எனது தந்தை மற்றும் அவர் சகோதரர்கள் ஒரே தலைவாசலில் வைத்து அவர்கள் பாகத்தை அனுபவித்து வருகிறார்கள், இன்று வரை பிரிக்கப்படவில்லை. என் அத்தைக்கு ஓடைப்பட்டி ராயர்குள சாவடியில் இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

வழக்கு சொத்திற்கு அருகிலோ, வடக்க பக்கமோ என் பெரியப்பா ஜெகநானுக்கு வீடு உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 முதல் 8 ஆவணங்களில் உள்ள சொத்து விவரத்தில் காலிமனை என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் தகர வீடு வரிசை எண்.23 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27.11.2019 ம் தேதி கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் அன்றைய தினம் தான் நான் தகவல் அறியும் சட்டத்தில் வாங்கினேன்.

வா.சா.ஆ.8 ல் பக்கம் 3 ல் இது,முதல் இதில் கண்ட சொத்தில் உனது சுவாதீனத்திற்கு ஒப்படைத்துவிட்டபடியால் என வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். வழக்குரை சொத்தில் மேற்கு பக்கம் 1 ம் பிரதிவாதி 18.05.1991 ம் தேதி பொன்னையா என்பவரிடமிருந்து வாய்மொழி கிரையம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பொன்னையா, சுப்பிரமணியிடமிருந்து கிரையம் வாங்கி அனுபவித்து வந்த சொத்தை தான் 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 02.12.1996 ம் தேதியில் ஓடைப்பட்டி பஞ்சாயத்தில் வீடு கட்ட அனுமதி பெற்று வீடு கட்டி இன்று வரை வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியும் என்றும், தற்போது அதை மறுத்து சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் சுப்பிரமணியிடமிருந்து ராஜேந்திரன் வாய் மொழியாக கிரையம் பெற்று அவர் 1991 வருடம் பொன்னையாவுக்கு கிரையம் கொடுதது அதன்பின்னர் பொன்னையா 1993 வருடம் பாலமாளுக்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்து 26.11.2003 ம் தேதி 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தானம் எழுதிக்கொடுத்து 11.03.2019 ல் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 11.03.2019 ல் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றாலும் 2005 முதல் செட் அமைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டா வருவாய் துறை தவறுதலாக என் அப்பா பெயரில் வழங்கியுள்ளார்கள் அதை வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, வா .சா.ஆ 3 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ 16 வழக்கின் பின்பு உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியிடைய நீண்ட அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், நான் இந்த வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக பொய்யான வழக்குமூலத்தை தயார் செய்து காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.10 15:58:55 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்